UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/04**

Paper 4 Texts **October/November 2008**

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer any **three** questions, each on a different text. You must choose one from Section 1, one from Section 2 and one other.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.
You should write between 500 and 600 words for each answer.

At the end of the examination, fasten all your work securely together.
All questions in this paper carry equal marks.

**முதலில் கீழே உள்ளதைப் படிக்கவும்**

விடைகள் எழுதும் தாளிலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். அதில் உங்கள் பெயர் ,
நம்பா், சென்டர் நம்பர் ஆகியவற்றை எழுதவும். கருப்பு அல்லது கரு நீல பேனா மையினால்
விடைகளை எழுதவும்.
பசை, ஹைலைட்டர்கள், ஸ்டேப்பிள் பின், பிழை திருத்தும் திரவங்கள், பேப்பர் க்ளிப்புகளைப்
பயன் படுத்தாதீர்கள்.

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு வேறு வேறு பாடப் பகுதியிலிருந்து எடுத்து விடைகள்
எழுதவும். பகுதி ஒன்றிலிருந்தும் பகுதி இரண்டிலிருந்தும் ஒவ்வொரு கேள்விக்கு விடை தரவும். மற்றொரு
கேள்வியை எந்தப் பகுதியிலிருந்தும் எடுக்கலாம்.
உங்களுடைய விடைகளை தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளை தேர்வு நடக்கும் இடத்துக்குக் **கொண்டுபோகக்கூடாது.**
புத்தகங்களை தேர்வு நடக்கும் இடத்துக்குள் கொண்டுபோகக்கூடாது.
ஒவ்வொரு கேள்விக்கும் 500 முதல் 600 சொற்களில் விடை எழுதவேண்டும்.

தேர்வு எழுதி முடித்தவுடன் விடைத்தாள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிக்கொடுக்கவும்.
எல்லா கேள்விகளுக்கும் சமமான மதிப்பெண்கள் தரப்படும்.
(ஒவ்வாரு விடைக்கும் 25 மதிப்பெண் வீதம் மூன்று விடைகளுக்கும் 75 மதிப்பெண்)

This document consists of **4** printed pages.

SP (CM/TL) T72299/1
© UCLES 2008

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

**[Turn over**

www.theallpapers.com

பகுதி –1

1 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

அ. குறுந்தொகை

காலே பரி தப்பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற, இவ்வுலகத்துப் பிறரே
-- வெள்ளிவீதியார்

(i) இந்தப் பாட்டில் செவிலித்தாயின் கூற்றை புலவர் எப்படி வருணிக்கிறார்?

(ii) இது பாலைத் துறையில் எவ்வாறு பொருந்தும்?

ஆ. புறநானூறு

கல்வி கற்பதன் சிறப்பை ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும் 'யாவரும் எம் உறவினரே' என்று கனியன் பூங்குன்றனும் புறநானூற்றுப் பாடல்களில் எப்படி விளக்குகிறார்கள் என்பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதவும்.

2 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

அ. திருக்குறள்

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

(i) அன்பின் சிறப்பை எப்படியெல்லாம் வள்ளுவர் போற்றிப் பாடுகிறார்?

(ii) 'என்பும் உரியர் பிறர்க்கு'-என்ற சொற்களால் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்து என்ன?

ஆ. எது அறிவுடைமை? வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதுக.


www.theallpapers.com

3 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

தேவாரம்- திருஞானசம்பந்தர்

வேயுறு தோளிபங்கன் விடம் உண்டகண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடி மேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பும் இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

அ. (i) இந்தப் பாடலில் 'ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பும் இரண்டும் உடனே' என்ற வரிகளில் சம்பந்தர் கூறுவது என்ன?

(ii) ஒவ்வொரு பாடலிலும் சம்பந்தருக்கு சிவபெருமான் எப்படித் தோற்றமளிக்கிறார்?

ஆ. கோளறு திருப்பதிகத்தை சம்பந்தர் எப்போது ஏன் பாடினார்?அதில் அவர் கூறும் செய்தி என்ன என்பது குறித்து ஒரு கட்டுரை வரைக.

## பகுதி – 2

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.
ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (அ அல்லது ஆ) விடை தருக.

4 இக்காலக் கவிதைகள்

அ. பாரதியார்
பாரதியார் கருத்தில் ஒரு தோழனின் குண நலன்கள் என்ன? இவை கண்ணன் இடத்தில் எவ்வாறு பொருந்தியிருக்கின்றன?

ஆ. பாரதிதாசன்
பாரதியாரின் கவிதை நடையும் பாரதிதாசனின் கவிதை நடையும் வேறு வேறா? ஒன்றுதானா? உங்கள் கருத்தை எடுத்துக்காட்டோடு விளக்கி கட்டுரை தருக.


www.theallpapers.com

5 தண்ணீர் தண்ணீர்- கோமல் சுவாமிநாதன்

அ. கிராம சூழ்நிலையை சித்தரிப்பதில் ஆசிரியர் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதை காரணம் காட்டி விளக்குக.

ஆ. இந்த நாடகத்தில் ஏதேனும் ஒரு கதாபாத்திரத்தை எடுத்துக் கொண்டு அவருடைய முழு பங்கையும் விமர்சிக்கவும்

6 முள்- தமிழ்ச் சிறுகதைகள்

அ. மதிப்பு மிகுந்த மலர்- கதையில் வள்ளிக் கண்ணனின் பாத்திரப் படைப்பு எவ்வாறு உள்ளது என்பதை விமர்சனம் செய்யவும்

ஆ. முள் என்ற சிறு கதைத் தொகுப்பில் உங்களுக்குப் பிடித்த ஏதேனும் இரண்டு கதைகளின் ஆசிரியர்களின் தமிழ் நடையை ஒப்பிடவும்.

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2008



www.theallpapers.com